**மூன்றாவது கூடுதல் சார்பு நீதிமன்றம், விழுப்புரம்**
**அசல் வழக்கு எண்.1268/2024**

| | | | |
|---|---|---|---|
| **சாட்சியின் பெயர்** | காளிதாஸ் | **மதம்** | இந்து |
| **த/பெ** | ஆதிமூலம் | **தொழில்** | ---- |
| **சாட்சி எண்.** | வா.சா.1 | **வயது** | 62 |
| **ஊர்** | அசோக் நகர், மேற்கு மாம்பலம் | **மாவட்டம்** | சென்னை |

28.08.2025 அன்று 1873ம் ஆண்டு சட்டம் 10ன்படி என்னால் உறுதி கொடுத்து சாட்சியமளிக்கப்பட்டது.

**விசாரணை தொடங்கும் நேரம்** : காலை 11.53 மணி
வாதிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை. பிரதிவாதி ஆஜர். பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**குறுக்கு விசாரணை**

முருகேசனுக்கு வழக்கு சொத்து தவிர எவ்வளவு சொத்துக்கள் உள்ளது என்றால் சுமார் 7,8 ஏக்கர் இருக்கும். இந்த 7,8 ஏக்கருடைய சர்வே எண்கள் தெரியுமா என்றால் பத்திரம் பார்த்தால் தான் தெரியும். வழக்கு சொத்தை வாங்கும்போது அந்த 7,8 ஏக்கருடைய பத்திரங்களை பார்த்தேனா என்றால் பாகப்பிரிவினை பத்திரம் உள்ளது. 7,8 ஏக்கர் சொத்துக்கள் சம்மந்தமான பத்திரங்களை பார்த்தேனா என்றால் இல்லை. ஆனால் நிலம் இருப்பது தெரியும். பாகப்பிரிவினை ஏற்பட்டது 1990ல் ஏற்பட்டது என்றால் சரிதான். பாகப்பிரிவினைக்கு பிறகு தனக்கு கிடைத்த சொத்துக்களுக்கு பஞ்சாட்ச்சரம் பட்டா, சிட்டா ஆவணங்களை தனது பெயருக்கு மாற்றவில்லை என்றால் சரிதான். பாகப்பிரிவினைக்கு முன்பும் பின்பும் பிரதிவாதி தான் தாவா சொத்தில் பயிர் வைத்துக்கொண்டு இருந்தார் என்றால் சரிதான். மாலதி என்பவருடைய சொத்துக்களையும் பிரதிவாதி தான் பயிர் வைத்து வந்தார் என்றால் சரிதான். மாலதியின் சொத்தை பிரதிவாதி குத்தகைக்கு பயிர் வைத்திருந்த அனுபவத்தை வைத்து தான் மாலதி அவருக்கு கிரையம் கொடுத்தார் என்றால் சரிதான். 1990க்கு முன்பிலிருந்து பல வருடங்களாக பிரதிவாதி தாவா சொத்தில் அனுபவம் வைத்திருந்ததால் எதிரிடை பாத்தியம் சித்தித்துவிட்டது என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி மூன்று வருடமாகத்தான் பயிர் வைக்கிறார். அதற்கு முன்பு அவருடைய அப்பா பயிர் வைத்து வந்தார். முருகேசனின் வாரிசுகள் சென்னை மற்றும் கடலூரில் வசித்து வந்ததால் பிரதிவாதியின் தகப்பனார் தான் பயிர் வைத்து வந்தார். வழக்குரையை நான் படித்து பார்த்தேனா என்றால் தெரியாது. தற்போது ஞாபகமில்லை. எனது வழக்குரையில் 4வது பாராவில் நீலாவதி என்கிற பஞ்சாட்ச்சரம் திருமணமாகி புதுச்சேரி மாநிலத்தில் வசித்து வந்ததால் தாவா சொத்தை அவரது உறவினரான பிரதிவாதியிடம் குத்தகைக்கு கொடுத்திருந்தார் என்று கூறியுள்ளது என்று சொன்னால் அது பொய்யானது. பாகம் பிரித்த பிறகு

பிரதிவாதி நிலத்தை பஞ்சாட்ச்சரத்துக்கு கொடுக்கவில்லை. நான் எனது வழக்குரைக்கு முரண்பாடாகவே தகவல்களை தெரிவிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. பாகப்பிரிவினை பத்திரத்தை தவிர பஞ்சாட்ச்சர உடமையில் வழக்கு சொத்து இருப்பதற்கான வேறு ஆவணங்கள் எதையும் நான் பார்க்கவில்லை என்று சொன்னால் சரிதான். நான் எனது மனைவி இறந்த பிறகு பட்டாவை எனது பெயரிலோ அல்லது 2,3 வாதிகள் பெயரிலோ மாற்றிக்கொண்டோமா என்றால் இல்லை எனது மனைவி பெயரிலேயே உள்ளது. வழக்கு சொத்து அனுபவத்தின் அடிப்படையில் பிரதிவாதி பெயரில் தான் சிட்டா உள்ளது என்றால் தற்போது எனது பெயரில் உள்ளது. தாவா சொத்தின் அனுபவத்தின் அடிப்படையில் பிரதிவாதி வசத்தில் தான் நாளது தேதி வரை உள்ளது என்றாலும், நானும் நீலாவதியும் வழக்கிற்காக பொய்யாக ஆவணங்களை தயார் செய்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நீலாவதி எனது மனைவிக்கு கிரையம் கொடுக்கும் வரை தாவா சொத்தில் பயிர் வைத்ததில்லை என்றால் அவர்கள் கேட்டு பிரதிவாதி கொடுத்துள்ளார். பாகப்பிரிவினைக்கு பிறகு கிரைய தேதி வரை நீலாவதி பிரதிவாதிக்கு அறிவிப்பு எதுவும் அனுப்பியுள்ளாரா என்றால் பதிவு தபாலுடன் அஞ்சலக ஒப்புகை அட்டையுடன் அனுப்பியுள்ளார். சாட்சி மேலும் அறிவிப்பை பெற்ற பிறகு பிரதிவாதியின் மனைவி என்னிடம் பேசினார். கிரையத்திற்கு பிறகு வீரமணி என்பவரிடம் பிரதிவாதி அடமானம் கொடுத்துள்ளதாகவும், ஒரு வருடத்திற்குள் நிலத்தை கொடுத்துவிடுவதாகவும் சொன்னார் என்பது பதிவு செய்துக்கொள்ளப்பட்டது. அந்த விவரத்தை நான் வழக்குரையில் நான் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. அவ்வாறு இருந்திருந்தால் அதை நான் வழக்குரையிலேயே சொல்லியிருப்பேன் என்றாலும், வழக்கிற்கு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னாலும் சரியல்ல. நீலவாதி கொடுத்த அறிவிப்பையோ ஒப்புகை அட்டையையோ நான் ஆவணமாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். நீலாவதி பிரதிவாதியிடம் எந்த காலத்திலும் வழக்கு சொத்தை வசம் கோரி கேட்டதில்லை என்றால் பார்க்கும்போதெல்லாம் கேட்டுக்கொண்டுதான் இருந்தார். வழக்கு சொத்தில் பிரதிவாதி அனுபவத்தில் இருப்பதையும், அவருக்கு எதிரிடை அனுபோகம் சித்தித்துவிட்டது என்பது தெரிந்தும் சொத்தை அடிமாட்டு விலைக்கு வாங்குவதற்காக நானும், நீலாவதியும் கூட்டுச்சேர்ந்து தவறான விற்பனை ஒன்றினை ஏற்படுத்திக்கொண்டோம் என்றால் சரியல்ல.

(பிரதிவாதியின் வழக்கறிஞரின் வேண்டுக்கோள்கிணங்க குறுக்கு விசாரணை தொடாச்சி)

**விசாரணை முடிவுற்ற நேரம்** : காலை 12.17 மணி

அவையறிய இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, பின்னர் சாட்சி சொன்ன பதில் சரியென சாட்சியால் ஒப்புகொள்ளப்பட்டு, என் முன்பாக கையொப்பம் இடப்பட்டது.

(ஒம்).S.ஜீவநந்தினி,
மூன்றாவது கூடுதல் சார்பு நீதிபதி,
விழுப்புரம்.